FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.) (குற்ற நடைமுறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

UNDER SECTION 173 BNSS
(பா.ந.பா.சி பிரிவு 173ன் படி)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129835

1. District : Madurai PS: V FAC Year: 2025 FIR No.: 11/2025 Date: 03-07-2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 02-07-2025 at 12.30 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time : 07.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03-07-2025 நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : 07.45 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03-07-2025 நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: South West at about 55 kms
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Sub Treasury office Periyar
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Selvi. R. Latha (b) Father's/ Husband's Name : Ramaiah
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு 11.05.1965 நாட்டினம் Indian வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Rtd. Govt. Middle School Teacher (g) Address : 9/617 கிழக்குத்தெரு, பேரையூர் மதுரை மாவட்டம்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Palanikumar, Addl. Sub treasury officer, Sub Treasury office, Periyar, Madurai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பின விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached Seperate Sheet Pages 3 to 6

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
03/07/2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
3-7-25

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 03-07-2025 / 08.35 hrs

Name: பெயர் N. Bharathi Priya
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police, V & AC, Madurai

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 03.07.2025-ஆம் தேதி காலை 07.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம் பேரையூர் கிழக்கு தெரு கதவு எண்.9/6/7-ல் வசிக்கும் ராமையா மகள் லதா என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புனர் R. லதா, த/பெ. ராமையா, கதவு எண். 9/6/7, கிழக்கு தெரு, பேரையூர், மதுரை மாவட்டம் பெறுனர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அழகர் கோவில் ரோடு, மதுரை. ஐயா, நான் கடந்த 26.06.2000-ம் தேதி மதுரை மாவட்டம் தே.கல்லுப்பட்டி ஒன்றியம் கெஞ்சம்பட்டி ஊராட்சி ஒன்றிய பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணியில் சேர்ந்தேன். அதன்பின்னர், பணியிட மாறுதலில், கடந்த 07.09.2001-ம் தேதி மதுரை மாவட்டம் தே. கல்லுப்பட்டி ஒன்றியம், சிலைமலைப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் இடைநிலை ஆசியராக பணியில் சேர்ந்து, அங்கேயே 24 வருடங்கள் பணிபுரிந்து கடந்த 31.05.2025-ம் தேதி வயது முதிர்வின் காரணமாக ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். எனக்கு மாதாந்திர சம்பளம் பேரையூர் சார்நிலை கருவூலம் மூலமாக எனது வங்கி சம்பளக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வந்தது. பிறகு ஜுன் மாதம் முதல் வாரத்தில் பேரையூரில் உள்ள வட்டார கல்வி அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த அலுவலர்களிடம் எனக்கு கிடைக்க வேண்டிய பணபலன்கள் சம்பந்தமாக கேட்ட போது, அவர்கள் எனக்குரிய SPF, Earned Leave Salary ஆகியவைகள் மட்டும் அவர்களது அலுவலகம் மூலமாக வழங்கப்படும் என்றும் மற்றவைகள் பேரையூர் சார்நிலை கருவூலம் மூலமாகத்தான் கிடைக்கப்பெறும் என்றும் எனவே அந்த அலுவலகத்திற்கு சென்று அது சம்பந்தமாக கேட்டுக்கொள்ளும்படி கூறிவிட்டார்கள். அதன் காரணமாக ஜுன் முதல் வாரத்தில் பேரையூர் சார்நிலை கருவூலத்திற்கு சென்று அங்கிருந்த அவ்வலுவலக உதவியாளர் திருமதி. லெட்சுமி அவர்களை சந்தித்து என்னை பற்றி தெரிவித்து எனக்குரிய பணபலன்களை பற்றி கேட்டேன். அதற்கு அவர் என்னை சிறிது நேரம் காத்திருக்கும்படி கூறிவிட்டு அவரது அலுவலகத்திற்கு உள்ளே சென்று விட்டு வந்தார். அப்போது அவர் என்னிடம் எனக்குரிய பணப்பலன்களான சேமநலநிதி (GPF), கருணைத்தொகை (Gratuity Amount) பில்கள் மற்றும் ஓய்வூதிய ஆணை (Pension Order) ஆகியன தங்களது அலுவலகத்தில்தான் நிலுவையில் உள்ளது என்றும் அதனை அவ்வலுவலக கூடுதல் சார்நிலை கருவூல அலுவலர் திரு. பழனிக்குமார் அவர்கள்தான் பட்டியல் சரிபார்த்து ஒப்புதல் செய்து முடிக்க வேண்டும் என்றும் கூறி எனது PAN Card, Adhar Card, Bank Pass Book, Ration Card ஆகியவற்றின் மூன்று நகல்கள் மற்றும் எனது Passport size Photo மூன்று ஆகியவற்றை வந்து கொடுக்குமாறு சொன்னார். அதன்படி அதற்கு மறுநாளே காலையில் அவ்வலுவலகம் சென்று திருமதி. லெட்சுமி அவர்களை சந்தித்து

அவரிடம் அவற்றை கொடுத்தேன். அப்போது அவர் என்னிடம் இவற்றை திரு. பழனிக்குமார் அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன், நீங்கள் அடுத்த வாரம் அவரை சந்தித்து விபரம் கேட்டு கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். பிறகு, கடந்த 09.06.2025-ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு எனது ஓய்வூதியர் எண். PEN4560707 என்றும், ஓய்வூதியம் பெற உரிய கருவூலத்தினை அணுகவும் என்று தமிழ்நாடு கருவூலத்திலிருந்து எனது செல்போன் எண்.7667441564-க்கு குறுஞ்செய்தி வந்தது. அதன்பின்னர், எனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் உடனே நான் பேரையூர் சார்நிலை கருவூலத்திற்கு செல்லவில்லை, பிறகு, கடந்த 13.06.2025-ம் தேதி, எனக்கு கிடைக்க வேண்டிய பணப்பலன்களான SPF, Earned Leave Salary ஆகியவைகள் எனது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது. பிறகு, ஜூன் இரண்டாவது வாரத்தில், பேரையூர் சார்நிலை கருவூல அலுவலகத்திற்கு திரு. பழனிக்குமார் அவர்களை பார்ப்பதற்காக சென்றேன். அந்த சமயத்தில், லெட்சுமியை சந்தித்த போது, அவர் என்னிடம் அன்றைய தினம் திரு. பழனிக்குமார் அவர்கள் அலுவலகத்திற்கு வரவில்லை ஆகவே அடுத்த வாரம் வாருங்கள் என கூறிவிட்டார். பிறகு நான் கடந்த 14.06.2025-ம் தேதியன்று காசிக்கு சுற்றுலா சென்றுவிட்டு, 25.06.2025-ம் தேதிதான் ஊருக்கு திரும்பினேன். பிறகு எனது வங்கி கணக்கில் எனக்கு கிடைக்கப்பெற வேண்டிய பணப்பலன்கள் அதுவாக வருமா என காத்திருந்தேன். ஆனால், அவை எனக்கு வரவில்லை. அதன்காரணமாக, கடந்த 01.07.2025-ம் தேதி செவ்வாய்கிழமை காலை சுமார் 11.00 மணிக்கு, பேரையூர் சார்நிலை கருவூலத்திற்கு சென்று, திரு. பழனிக்குமார் அவர்களை நேரில் சந்திக்க முயன்ற போது, அவர் அங்கு இல்லை. பிறகு அங்கிருந்த திருமதி. லெட்சுமி அவர்களை சந்தித்து கேட்ட போது, அவர் என்னிடம், திரு.பழனிக்குமார் அவர்கள் இன்னும் அலுவலகத்திற்கு வரவில்லை என்றும், ஒருவேளை மாலையில் வாலாம் அதனால் நாளை காலையில் வந்து அவரை சந்தியுங்கள் என கூறிவிட்டார். அதன்காரணமாக நேற்று (02.07.2025) காலை சுமார் 11.00 மணியளவில், நான் மீண்டும் பேரையூர் சார்நிலை கருவூலம் அலுவலகத்திற்கு திரு. பழனிக்குமாரை பார்க்க சென்ற போது, அங்கிருந்த அலுவலக உதவியாளர் திருமதி. லெட்சுமி அவர்கள் திரு. பழனிக்குமார் அவர்கள் முக்கியமான அலுவலில் இருப்பதால், சிறிது நேரம் கழித்து வந்து அவரை பாருங்கள் எனக்கூறினார். அதன்படி நான், அவ்வலுவலகத்திற்கு அருகில் காத்திருந்து விட்டு மதியம் சுமார் 12.30 மணியளவில் மீண்டும் அவ்வலுவலகத்திற்கு சென்று, அவ்வலுவலக உதவியாளர் திருமதி. லெட்சுமி அவர்களிடம் திரு. பழனிக்குமார் அவர்களை எனக்கு கிடைக்க வேண்டிய பணப்பலன்கள் சம்பந்தமாக சந்திக்க வேண்டும் எனக்கூறினேன். அவர் என்னை கூடுதல் சார்நிலை கருவூல அலுவலர் திரு. பழனிக்குமார் அவர்களின் அறைக்கு அழைத்து சென்று, என்னிடம் பழனிக்குமார் அவர்களை காண்பித்தார். நான், திரு. பழனிக்குமார் அவர்களிடம் என்னை பற்றி விபரம் கூறி, கடந்த மே மாதம் பணி ஓய்வு பெற்ற விபரத்தை தெரிவித்து எனக்கு கிடைக்கப்பெற வேண்டிய சேமநலநிதி, கருணைத்தொகை பணப்பலன்கள்

மற்றும் ஓய்வூதிய ஆணை குறித்து கேட்டேன். அப்போது, அவர் மேஜையிலிருந்த கணிப்பொறியில் சரிபார்த்துவிட்டு, ஆம், நீங்கள் கூறியபடி உங்களுக்கு கிடைக்க வேண்டிய பணபலன்கள் மற்றும் மாதாந்திர ஓய்வூதிய ஆணை என்னிடம்தான் நிலுவையில் உள்ளது, அது உங்களுக்கு கிடைக்க வேண்டும் என்றால் நீங்கள் எனது செலவிற்கு பணம் ரூ.11,000/- கொடுக்க வேண்டும் எனக்கூறினார். அதற்கு, நான் இது அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணமா என்று கேட்டேன், அதற்கு அவர், உங்களுக்கு பணப்பலன்கள் கிடைக்க நான் ஏற்பாடு செய்வதற்காக எனக்கு தாவேண்டிய பணம் என்று கூறினார். நான் அவரிடம் அவ்வளவு பணம் என்னிடம் தற்போது இல்லை, எனது தம்பி மற்றும் குடும்பத்தாரை நான்தான் பார்த்துக்கொள்ள வேண்டி உள்ளது, எனவே பணம் இல்லாமல் முடித்து தாங்கள் என கெஞ்சி கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் என்னால் பணம் இல்லாமல் செய்து தர முடியாது, பணம் தராவிட்டால் நீங்கள் அலைந்து கொண்டுதான் இருக்க வேண்டும், எனவே நீங்கள் நான் கேட்ட பணம் ரூ.11,000/-த்தை நாளை (03.07.2025) காலை வந்து என்னிடம் கொடுங்கள், நான் உடனே உங்களது கோப்புகள் மீது நடவடிக்கை எடுத்து உங்களுக்கு சேமநலநிதி, கருணைத்தொகை பணப்பலன்கள் மற்றும் ஓய்வூதிய ஆணை ஆகியவற்றை உங்களுக்கு சீக்கிரம் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என கோபமாக சொன்னார். நானும் வேறு வழியின்றி, எனக்கு பணப்பலன்கள் மற்றும் ஓய்வூதிய ஆணை கிடைக்க வேண்டும் என்பதற்காக சரி என்று அவரிடம் சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர், இது சம்பந்தமாக எனது தம்பி தமிழ்கண்ணனிடம் சொல்லி வருத்தப்பட்டேன். அதற்கு அவரும் அரசாங்க வேலையை செய்வதற்கு லஞ்சமாக பணம் கேட்கிறார்களே என வருத்தப்பட்டார். இத்தனை வருடம் ஆசிரியராக, நேர்மையாக உழைத்தும், உழைத்த பணத்தை பெறுவதற்காக லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் லஞ்சம் கேட்கும் பேரையூர் சார்நிலை கருவூலம் அலுவலகத்தில் பணிபுரியும் கூடுதல் சார்நிலை கருவூல அலுவலர் திரு. பழனிக்குமார் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு இன்று (03.07.2025) இம்மனுவை கொடுக்கிறேன். இத்துடன் எனது (1) ஓய்வூதிய பணப்பலன் சம்பந்தமான Accountant General (A&E), Tamil Nadu அலுவலக கடிதம் எண். AG(A&E)PEN E17/11731564/3/R1731564 Dated : 23/04/2025-ன் நகல் (2) எனது பணிவிடுவிப்பு ஆணை - தே.கல்லுப்பட்டி (இ) பேரையூர் வட்டாரக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க. எண். 270/அ3/2025 நாள் : 31.05.2025-ன் நகல் மற்றும் (3) 09.06.2025-ம் தேதி எனது செல்போனுக்கு தமிழ்நாடு கருவூலத்திலிருந்து வந்த Message-ன் பிரிண்ட் அவுட் நகல் ஆகியவற்றை இணைத்து உள்ளேன். மேலும், பேரையூர் சார்நிலை கருவூல அலுவலக கூடுதல் சார்நிலை கருவூல அலுவலர் திரு. பழனிக்குமார் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.11,000/-த்தையும் கொண்டு வந்துள்ளேன்.

அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இப்படிக்கு, (ஒ-ம்) XXXXXX இரா. இலதா 03/07/2025.

Sir, Received the typed complaint today 03-07-2025 at 07.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the Accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, V&AC, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 11/2025 u/s 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 07.45 hrs and took up investigation. Sd./-XXXXXX (N. Bharathipriya) 03-07-25 Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Selvi. R. Latha, D/o. Ramaiah, 967, East street, Peraiyur, Madurai District along with the copy of (1) Copy of Letter No. AG(A&E)PEN E17/11731564/3/R1731564 Dated : 23/04/2025 of Office of the Accountant General (A&E), Tamil Nadu, Chennai, (2) Duty Relieving Order of Selvi. R. Latha in Proceedings in C. No. 270/A3/2025 Dated : 31.05.2025 of Block Education Officer of T. Kalluppati @ Peraiyur and (3) Print out copy of Text Message received in Selvi. Latha's cell phone from Tamil Nadu Treasury Department on 09.06.2025 are submitted to the Hon'ble Principal District Judge, Principal District Court, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

(N. Bharathipriya)
Inspector of Police,
Vigilance & Anti Corruption,
Madurai.
(03.07.2025)